LIBRARY
28 APR 1965
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 23rd January 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Elections to Panchayats in Singanallur

*2 S.N. Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have ordered the postponement of elections to the Panchayats in Singanallur Panchayat block, Coimbatore district; and

(*b*) if so the reasons therefor and whether the copy of the order be placed on the Table of the House?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்:

(அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம். சிங்கநல்லூர் பஞ்சாயத்து யூனியனில் அடங்கிய முழுப் பகுதிக்கும் நகராட்சி ஒன்றை அமைக்க அரசாங்கம் தற்காலிகமாய் முடிவு செய்துள்ளது. எனவே, அந்த யூனியனிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் தேர்தல்கள் நடத்துவது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று அந்த மாவட்டக் கலெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமான அரசாங்கக் குறிப்பின் நகல் ஒன்று சபையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சிங்கநல்லூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியை நகராட்சியாக மாற்றுவது பற்றி யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. 1958-ஆம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டப்படி கோர்ட்டுக்குக்கூட, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு, தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அதிகாரம் கிடையாது. அப்படியிருக்கும்போது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, அங்கத்தினர்களெல்லாம் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த பிறகு தேர்தல் ஒத்திவைக்க வேண்டிய காரணம் என்ன? இந்த உத்தரவை ஏன் முன்பே பிறப்பித்திருக்கக் கூடாது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது சம்பந்தமான உத்தரவு சமீபத்தில் பிறப்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட பத்து நாட்களுக்குள்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட

தேர்தல் அதிகாரி ஏற்கனவே அது பற்றிய வேலைகளைத் துரிதமாக நடத்திக்கொண்டு வந்தார்கள். அதனால், இம்மாதிரி உத்தரவு இடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்கள் இப்படிச் சமாதானம் சொல்லி இலாகாவிலுள்ள பலவீனத்தை மறைக்கக் கூடாது. ஆர். டி. எல். ஏ. இலாகாவிற்கும், பஞ்சாயத்துத் தேர்தலுக்கு உத்தரவிடக்கூடிய இலாகாவிற்கும் இடையே இருக்க வேண்டிய இணைப்பில் உள்ள பலவீனம் இதற்குக் காரணமா? ஒரு பகுதியை நகராட்சி மன்றமாக மாற்றுவதற்கான விஷயம் ஒரு இலாகாவில் பரிசீலனையில் இருக்கிறதென்றால், அதற்கு முன்பே, அந்தப் பகுதியை ஏன் தேர்தலிருந்து விலக்கி யிருக்கக் கூடாது? அதற்கான காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் விசாரிக்கவில்லையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பரிசீலனையில் இருக்கும் பகுதியை யெல்லாம் தேர்தலிலிருந்து நிறுத்திவிட்டால், பின்பு சங்கடங்கள் ஏற்படும். அதனால்தான் தேதியை நிர்ணயித்தார்கள். இங்கிருந்து முடிவு செய்த பிறகு, தேர்தலை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. 172-வது செக்ஷன்படி சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் 17(2) செக்ஷனில் சர்க்காருக்குப் போதுமான அதிகாரம் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நகராட்சி மன்றமாக மாற்றுவதைப் பற்றி முடிவு எடுக்கிற வரையில் இப்பொழுதிருக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பதவி காலம் நீடிக்கப்படுமா? அல்லது வேறு ஏதாவது முடிவு எடுக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சட்டப் பிரகாரம், மற்றப் பஞ்சாயத்துக்களுக்கு எப்படியோ அப்படிதான் இதற்கும். அங்கெல்லாம் எப்படிச் சாதாரணமாக முடிகிறதோ அது போல்தான் இதற்கும்.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி

* 76. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து 1964 செப்டம்பரில் எக்ஸ்ரே பிலிம்கள் களவாடப்பட்டனவா?

(இ) ஆமென்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பர்னார்டு கதிரியல் நிறுவனத்தில் (Barnard Institute of Radiology) 1-4-1963-லிருந்து 26-6-1964 தேதி வரை எக்ஸ்ரே பிலிம்கள் கணக்கில் குறைந்து அரசாங்கத்திற்கு அதனால் நஷ்டமேற்பட்டதுபற்றிய அறிக்கை ஒன்று மருத்துவத் துறை நெறியாளரிடமிருந்து கிடைத்துள்ளது.

(இ) இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.